# பத்தாம் வகுப்பு – அரையாண்டுத் தேர்வு 2014
# சமூக அறிவியல் - விடை குறிப்புகள்

## சரியான விடையை தேர்ந்தெடுகக :

| | | |
|---|---|---|
| 1. | ஆ | கால்பார்ட் |
| 2. | இ | லூசிட்டானியா |
| 3. | அ | 1856 |
| 4. | ஈ | சர்தார் வல்லபாய் பட்டேல் |
| 5. | இ | 22 |
| 6. | ஆ | தேர்தல் ஆணையம் |
| 7. | அ | அக்டோபர் 12, 2005 |
| 8. | அ | ஆரவல்லி |
| 9. | ஈ | திணை வகை |
| 10. | அ | டெல்லி |
| 11. | ஆ | காட்வின் ஆஸ்டின் சிகரம் |
| 12. | ஆ | 950 டாலர்கள் |
| 13. | இ | ஆச்சார்ய வினோபாவே |
| 14. | இ | இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் |

## 15. பொருத்துக

| | | |
|---|---|---|
| அ | பதேக் ஹைதர் | வேலூர் கலகம் |
| ஆ | கான் அப்துல் காபர் கான் | எல்லை காந்தி |
| இ | இராஜா ராம் மோகன் ராய் | நவீன இந்தியாவில் விடிவெள்ளி |
| ஈ | பேகம் ஹஸ்ரத் மஹால் | ஔவுத் |
| உ | எப்.டி.ரூஸ்வெல்ட் | அட்லாண்டிக் சாகனம் |
| ஊ | தராய் | சதுப்பு நிலம் |
| எ | மௌசின்ராம் | அதிக மழை பெறும் பகுதி |
| ஏ | கேரளா | கோதுமை |
| ஐ | சோட்டா நாக்பூர் மண்டலம் | இரும்பு எ.்.கு தொழிலகம் |
| ஒ | பஞ்சாப் | கோதுமை |

## 2 மதிப்பெண் விடை

| | |
|---|---|
| 16. | **முதல் அபினிப் போருக்கான காரணங்கள் (ஏதேனும் 2 மட்டும்)**<br>1. ஆங்கிலேயர்கள் இந்தியாவில் அபினிச் செடியை வளர்த்து சீனாவில் விற்பதை சீனர்கள் விரும்பவில்லை<br>2. சீன அரசாங்கம் அபினிக்கு அதிக சுங்க வரியும், கட்டுப்பாடும் விதித்தது ஐரோப்பிய வணிகர்களை எரிச்சலடைய வைத்தன.<br>3. சீனப் பேரரசு அபினி வர்த்தகத்தை தடை செய்ததால் ஆங்கிலேயர்கள் 1839-ல் சீனா மீது போர் தொடுத்ததால் முதலாம் அபினி போர் ஏற்பட்டது. |
| 17. | **முதல் உலகப் போரில் அமெரிக்கா ஈடுபடுவதற்காக காரணம்**<br>1. 1917 ஆம் ஆண்டு அமெரிக்க கப்பலான லூாசிடானியாவை, ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்த நிகழ்வே முதல் உலகப்போரில் அமெரிக்கா ஈடுபட காரணம் ஆகும்.<br>2. இதில் நூற்றுக்கணக்கான அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். இதனால் |

| | |
|---|---|
| | கோபமுற்ற அமெரிக்கா ஜெர்மனி மீது போர் அறிவிப்பால் முதல் உலகப் போரில் அமெரிக்கா ஈடுபட்டது. |
| 18. | **ஹிட்லர் ஜெர்மனியின் அதிபராதல்**<br>1. ஹிட்லர் தலைமையில் நாசிசக் கட்சி ஒரு பெரிய கட்சியாக வளர்ந்து, 1932ஆம் ஆண்டு தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்று இரண்டாவது பெரிய கட்சியாக விளங்கியது.<br>2. 1933ல் ஹிட்லர் ஜெர்மனியின் சான்கலரானார்.<br>3. 1934ல் ஹிண்டன்பர்க் காலமானதைத் தொடர்ந்து ஹிட்லர் குடியரசு தலைவரானார்.<br>4. பின்னர் குடியரசைக் கலைத்து ஹிட்லர் தன்னை ஜெர்மனியின் அதிபராக தானே அறிவித்தக் கொண்டார். |
| 19. | **அழித்துப் பின்வாங்கும் கொள்கை**<br>1. இரண்டாம் உலகப் போரில் இரஷ்யாவிற்கும் ஜெர்மானிக்கும் இடையே நடைபெற்ற போரில் இரஷ்யர்கள் பின்பற்றியக் கொள்கை அழித்து பின்வாங்கும் கொள்கை ஆகும்.<br>2. இக்கொள்கை மூலம் பயிர்கள், பாலங்கள், இருப்புப் பாதைகள் போன்றவற்றை எதிரிகள் கைப்பற்றாமல் இருக்க தாங்களே தீயிட்டு அழித்துக் கொண்டு முன்னேறினர்.<br>இரஷ்ய தலைநகர் மாஸ்கோவை கைப்பற்றிய ஜெர்மானிய படைகளுக்கு எதுவும் கிடைக்காததால் ஜெர்மனிக்கு தோல்வி முகம் ஏற்பட்டது. |
| 20. | **யூரோவின் முக்கியத்துவம்**<br>1. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றை நாணய முறை 'யூரோ' என்றழைக்கப்படுகிறது. இதன் குறியீடு € ஆகும்.<br>2. சனவரி 1, 2002-ல் யூரோ நடைமுறைக்கு வந்தது.<br>"வணிக பரிவர்த்தனைக்கான தடைகளை களைகிறது. தடையற்ற வணிகத்தை மேன்மையுறச் செய்கிறது." |
| 21. | **பிரார்த்தனா சமாஜம்**<br>1. டாக்டர் ஆத்மராம் பாண்டுராங் என்பவரால் மும்பையில் 1867ல் தோற்றுவிக்கப்பட்டது.<br>2. சமபந்தி உணவு, கலப்பு திருமணம், விதவைகள் மறுமணம், குழந்தை திருமண ஒழிப்பு போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டது.<br>3. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இரவுப் பள்ளிகள், அநாத இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களை நடத்தியது.<br>4. மகாதேவ கோவிந்த ரானடே இச்சபையின் முன்னேற்றத்திற்காக தன் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தார். |
| 22. | **1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் புகுத்திய மாற்றங்கள் (ஏதேனும் 4 மட்டும்)**<br>1. மாகாணங்களில் தன்னாட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.<br>2. மாகாணங்களில் செயல்பட்டு வந்த இரட்டை ஆட்சி ஒழிக்கப்பட்டது.<br>3. மத்தியில் கூட்டாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது.<br>4. கூட்டாட்சி ரிசர்வ் வங்கி நிறுவப்படுதல்.<br>5. மாநில பிரச்சினைகளை தீர்த்து வைக்க கூட்டாட்சி நீதிமன்றம் நிறுவப்பட்டது. |
| 23. | **காமராஜரின் நலத்திட்டப் பணிகள் (ஏதேனும் 4 மட்டும்)**<br>1. மதிய உணவு திட்டம் ஏற்படுத்தினார்.<br>2. புதிய பள்ளிகளைத் திறந்து, இலவசக் கல்வி வழங்குதல்<br>3. கால்வாய்களை வெட்டுதல்<br>4. புதிய அணைகளை கட்டுதல்<br>5. வேளாண்மையை மேம்படுத்துதல்<br>6. புதிய தொழிற்சாலைகள் அமைத்தல் போன்ற பல நலதிட்டங்களை காமராசர் மேற்கொண்டார். |

| | |
|---|---|
| 24. | **மனித இனத்தின் அருங்காட்சியகம்**<br>1. இந்தியாவின் நூறு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் சாதி, மதம், மொழி மற்றும் இனத்தால் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளனர்.<br>2. இத்தகைய பிரிவுகளால் இந்தியா மனித இனத்தைப் பற்றி படிக்கக்கூடிய அருங்காட்சியாகவும், ஆய்வகமாகவும் திகழ்கிறது. |
| 25. | **அரசியல் கட்சிகளின் பணிகள்**<br>1. பொதுக் கொள்கைகளை உருவாக்குதல்<br>2. தேர்தலில் போட்டியிடுதல்<br>3. மக்களுக்கு கல்வி அறிவு புகட்டுதல்<br>4. அரசுக்கும் மக்களுக்கும் பாலமாகத் திகழ்வது |
| 26. | **இமயமலையின் முக்கியத்துவம்**<br>1. இந்தியாவின் இயற்கை அரணாக அமைந்துள்ளது.<br>2. இமயமலை அந்நிய படையெடுப்பை தடுக்கிறது<br>3. வட இந்திய நதிகள் உற்பத்தியாகிறது.<br>4. தென் மேற்கு பருவ காற்றினை தடுத்து அதிக மழைப் பொழிவை தருகிறது. |
| 27. | **இந்தியாவில் மிக அதிக மழைபெறும் பகுதிகள் (ஏதேனும் 4 மட்டும்)**<br>1. கிழக்கு இமயமலையின் தெற்கு சரிவு.<br>2. அஸ்ஸாம்<br>3. மேற்கு வங்காளம்.<br>4. கொங்கணம்<br>5. மலபார் கடற்கரை |
| 28. | **வெப்ப மண்டல பசுமை மாறாக் காடுகளின் நான்கு அம்சங்கள் (ஏதேனும் 4 மட்டும்)**<br>1. பசுமை மாறாமல் இருக்கும்<br>2. இலைகள் உதிர்வதில்லை<br>3. மிக அடர்ந்து காணப்படும்<br>4. மரங்கள் 60 மீட்டர் உயரம் வரை வளரும்<br>5. 200 செ.மீ. மேல் மழை பொழிவு பெறும் |
| 29. | **பருத்தி விளையுமிடங்கள் (ஏதேனும் 4 மட்டும்)**<br>1. குஜராத்<br>2. மகாரார்'டிரம்<br>3. ஆந்திரபிரதேசம்<br>4. கர்நாடகா<br>5. தமிழ்நாடு<br>6. பஞ்சாப்<br>7. மத்திய பிரதேசம் |
| 30. | **தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகள் (ஏதேனும் 4 மட்டும்)**<br>1. மூலப்பொருட்கள்<br>2. எரிசக்தி<br>3. போக்குவரத்து<br>4. மனித சக்தி<br>5. நீர்வளம்<br>6. சந்தை<br>7. அரசாங்க கொள்கைகள் |
| 31. | **காற்று மாசுகளைப் பட்டியலிடுக (ஏதேனும் 4 மட்டும்)**<br>1. எரிமலை வெடிப்பு<br>2. அணுக்கதிர் வீச்சு |

| | |
|---|---|
| | 3. அங்கக வேதியியல் பொருட்கள்<br>4. கந்தக டை ஆக்ஸைடு<br>5. கார்பன் மோனாக்ஸைடு<br>6. நைட்ரஜன் ஆன்ஸைடு |
| 32. | **இந்திய இரயில் போக்குவரத்து (ஏதேனும் 2 மட்டும்)**<br>1. கரடு முரடான நிலப்பரப்பை கொண்ட இமய மலையில் இரயில் பாதைகள் காணப்படுகின்றன.<br>2. வறட்சியான மேற்கு ராஜஸ்தான், பிரம்ம புத்திரா பள்ளத்தாக்கு மற்றும் அடர்ந்த காடுகளில் இரயில் பாதைகள் அமைந்துள்ளன.<br>3. வட இந்திய சமவெளியில் இரயில் பாதை அடர்ந்து காணப்படுகிறது.<br>4. தீபகற்ப இந்தியா மேடு பள்ளங்களை உடைய பகுதியிலும் இரயில் அமைப்பு கொண்டுள்ளது. |
| 33. | **புவித்தகவல் தொகுதி – வரையறு**<br>1. புவித்தகவல் தொகுதிகள் கணினி, மென்கட்டளைத் தொகுப்பு, பரப்பு சார் புள்ளி விவரங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட தொகுப்பாகும்.<br>2. புவிசார் தவல்களை திரட்டவும், சேமிக்கவும், வகைப்படுத்தவும், பார்த்து அறியச் செய்யவும், கையாளவும், நிகழ்காலம் வரை சரி செய்யவும், பகுப்பாய்வு செய்யவும் பயன்படுகின்றன. |
| 34. | **கலப்பு பொருளாதாரம்**<br>1. அரசுத்துறை நிறுவனங்களும், தனியார் துறை நிறுவனங்களும் இணைந்து செயல்படுவதே கலப்பு பொருளாதாரம் ஆகும்.<br>2. எ.கா. தொலை தொடர்பு துறை |
| 35. | **தலையிடாக் கொள்கை**<br>1. அரசு, பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது ஆகும்.<br>2. பொருள்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் நுகர்வு போன்றவற்றில் அரசின் தலையீடு இல்லாமல் இருப்பது. |

## வேறுபாடு (ஏதேனும் 2 மட்டும்)

| 36. | மேற்கு தொடர்ச்சி மலைகள் | கிழக்குத் தொடர்ச்சி மலைகள் |
|---|---|---|
| 1 | தொடர்ச்சியான மலைத்தொடர் | தொடர்ச்சியற்ற மலைத்தொடர் |
| 2 | மேற்கு கடற்கரைக்கு இணையாக செல்கிறது. | கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. |
| 3 | தபதி நதியிலிருந்து கன்னியாகுமரி வரை பரவியுள்ளது. | மகாநதிக்கும் வைகை நதிக்கும் இடையில் காணப்படுகிறது. |
| 4 | உயரமாக மலை ஆனைமுடி | உயரமான சிகரம் மகேந்திர கிரி |

| 37. | லூ | நார்வெஸ்டர்ஸ் |
|---|---|---|
| 1 | இது வலிமையான வெப்பக்காற்று | இது இடியுடன் கூடிய தலக்காற்று |
| 2 | இந்தியாவின் வடக்கு மற்றும் வடமேற்கு பகுதிகளில் வீசும். | வடகிழக்கு இந்தியப் பகுதிகளில் வீசும் |
| 3 | குறைந்த மழை பொழிவை தரும் | அதிக மழைப் பொழிவைத் தருகிறது |
| 4 | பகல் நேரத்தில் வீசும் | இடியுடன் மழை பெய்யும் |

| 38. | புதுப்பிக்க கூடிய வளங்கள் | புதுப்பிக்க முடியாத வளங்கள் |
|---|---|---|
| 1 | மீண்டும் மீண்டும் புதுப்பிக்க கூடியது | பயன்பாட்டிற்கு பின் மீண்டும் புதுப்பிக்க இயலாது |
| 2 | உ-ம் சூரிய ஒளி, காற்று, நீர் | உ-ம் நிலக்கரி, கச்சா எண்ணெய் |
| 3 | இவை தொடர்ந்து இயற்கையாக கிடைக்கக் கூடியது | இவை தொடர்ந்து கிடைக்காது. |

| 39. | மலைகளில் காற்று மோதும் பக்கம் | மலைகளில் காற்று மோதாப் பக்கம் |
|---|---|---|
| 1 | காற்று வீசும் திசையை நோக்கியுள்ள மலைச்சரிவு | காற்று வீசும் திசைக்கு மறைவாக உள்ள மலையில் மறுபக்க சரிவு |
| 2 | அதிக மழையை பெறுகிறது | குறைந்த மழையை பெறுகிறது |
| 3 | எ.கா. மேற்கு தொடர்ச்சி மலையில் மேற்குச் சரிவு | எ.கா. மேற்கு தொடர்ச்சி மலையில் கிழக்குச் சரிவு |

| 40. | வேளாண் சார்ந்த தொழிலகம் | கனிமம் சார்ந்த தொழிலகம் |
|---|---|---|
| 1 | வேளாண் பொருட்கள் மூலப் பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன. | உலோகம் மற்றும் உலோகமற்ற பொருட்கள் மூலப்பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன. |
| 2 | மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்களில் தொழில்சாலைகள் செயல்படுகின்றன. | கனிமச் சுரங்கங்களுக்கு அருகில் தொழில்சாலைகள் செயல்படுகின்றன. |
| 3 | எ.கா. பருத்தி ஆலைகள், சணல் ஆலைகள், சர்க்கரை ஆலைகள் | எ.கா. இரும்பு எ.்கு தொழிற்சாலைகள் |

| 41. | நீர் மாசடைதல் | நிலம் மாசடைதல் |
|---|---|---|
| 1 | நன்னீரில் தரத்தை மாற்றம் செய்கிறது | நிலம் மாசடைகிறது |
| 2 | நீரில் வாழும் உயிரினங்களுக்கு கெடுதல் ஏற்படுகிறது | தாவரங்களுக்கும், விலங்குகளுக்குமா பாதிப்பு ஏற்படுகிறது |
| 3 | வேதியியல், இயற்பியல், உயிரியல் மாற்றத்தினால் ஏற்படுகிறது | கழிவுகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், இரசாயனங்கள் மூலம் ஏற்படுகிறது. |

| 42. | தேசிய நெடுஞ்சாலை | மாநில நெடுஞ்சாலை |
|---|---|---|
| 1 | மாநில தலைநகரங்களை தேசிய நகரத்துடன் இணைக்கிறது | மாநில தலைநகரங்களை மாவட்ட தலைநகரத்துடன் இணைக்கிறது |
| 2 | மத்திய பொதுப் பணித் துறை பராமரிக்கிறது | மாநில பொதுப் பணித் துறை பராமரிக்கிறது |
| 3 | எ.கா. என்.எச். 47 | கடலூர் - சித்தூர் சாலை |

| 43. | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|
| 1 | உபரிப் பொருட்களை வெளிநாட்டிற்கு விற்பது | தேவையான பொருட்களை வெளிநாட்டிலிருந்து வாங்குவது. |
| 2 | தேயிலை, காப்பி, சர்க்கரை முக்கிய ஏற்றுமதி | இயந்திரக் கருவிகள், பெட்ரோலியம், முக்கிய இறக்குமதி |
| 3 | ஏறத்தாழ 7500 விதமான பொட்களை 190 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது | ஏறத்தாழ 6000 விதமான பொருட்கள் 140 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. |

தலைப்பு வினா

| | |
|---|---|
| 44 | **முதல் உலகப் போரின் உடனடிக் காரணம்** |
| அ | 1908ஆம் ஆண்டு |
| ஆ | பிரான்சிஸ் பெர்டினாண்டு |
| இ | செர்பிய இளைஞரால் சுட்டுக் கொல்லப்பட்டார் |
| ஈ | செர்பியாவிடம் விளக்கம் கேட்டு, போர் அறிவித்தது |

| | |
|---|---|
| 45 | ஐரோப்பிய ஒன்றியத்தின் சாதனைகள் |
| அ | யூரோ |
| ஆ | ஐரோப்பாவில் வணிக பரிவர்த்தனைக்கான தடைகளை களைக்கிறது |
| இ | 27 நாடுகள் |
| ஈ | ஐரோப்பிய ஆராய்ச்சி நிறுவனம் |

| | |
|---|---|
| 46 | **1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான அரசியல் காரணங்கள்** |
| அ | வெல்லெஸ்லி பிரபு |
| ஆ | நாடு இழக்கும் கொள்கை |
| இ | சிறைபிடிக்கப்பட்டு ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டாா |
| ஈ | ஓய்வூதியம் நிறுத்தப்பட்டதால் |

| | |
|---|---|
| 47 | **மவுண்ட் பேட்டன் திட்டம்** |
| அ | மவுண்ட் பேட்டன் பிரபு |
| ஆ | மவுண்ட் பேட்டன் பிரபு |
| இ | இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளாக பிரிப்பது |
| ஈ | காங்கிரசும், முஸ்லீக்கும் ஏற்றுக் கொண்டன |

**பெருவினா (ஏதேனும் 5 மட்டும்)**

48. அ. **F.D. ரூஸ்வெல்ட் அறிவித்த நிவாரணம், புனரமைப்பு மற்றும் சீர்திருத்தங்கள் பற்றி விரிவான விடையளி.**

1. **புதிய கொள்கை**
   1. எப்.டி. ரூஸ்வெல்ட் புதிய பயனுரிமை கொள்கையை கொண்டு வந்தார்.
   2. இது உதவி, மீட்பு, சீர்திருத்தம் என்ற மூன்று அம்சங்களைக் கொண்டு இருந்தது.
2. **டென்னசி பள்ளத்தாக்கு திட்டம்**
   1. தொழிற் பெருக்கம்
   2. விவசாயம் ஊக்குவித்தல்
   3. மண்வளம்
   4. வன வளம் பாதுகாத்தல்
   5. மின் உற்பத்தி செய்தல்
   6. கப்பல் போக்குவரத்து
   7. வெள்ளத்தடுப்பு
   8. அணைகள் கட்டுதல்
3. **கூட்டாட்சி அவசர நிவாரண நிர்வாகம்**
   மாநில, உள்ளாட்சிகளுக்கு 500 மில்லியன் டாலர்கள் நிதியாக வழங்கப்பட்டது.
4. **கூட்டாட்சி ரிசர்வ் வங்கி**
   வங்கி நிறுவனங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கு கடன் வழங்கியது.
5. **பாதுகாப்பு பரிவர்த்தனைச்சட்டம்**
   பங்குச் சந்தையில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு உரிமம் உழங்கப்பட்டது.

6. **தேசிய தொழில் மீட்புச்சட்டம்**
    1. தொழிலாளர்களின் சம்பள உயர்வு
    2. பணிநேரக் குறைப்பு போன்ற சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.
7. **வேளாண்மை பொருட்கள் சீரமைப்புச் சட்டம்**
    1. விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கப்பட்டது.
    2. விவசாயிகள் உற்பத்தி செய்யும் தானியத்தின் அளவைக் குறைத்து விலை உயர்வுக்கு வழி வகுத்தது.

48. ஆ. **இரண்டாம் உலகப்போரின் விளைவுகள் யாவை? (ஏதேனும் 5 மட்டும்)**

**1. உயிரிழப்பு**

சுமார் 50 மில்லியன் மக்கள் உயிரிழந்தனர்.

2. **பொருள் சேதம்**

ஏராளமான பொருளாதார அழிவை ஏற்படுத்தியது.

3. **ஜெர்மனியில் ஆட்சி மாற்றம்**

ஜெர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கிழக்கு ஜெர்மனி ரஷ்யாவாலும், மேற்கு ஜெர்மனி பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா நாடுகளால் கட்டுப்படுத்தப்பட்டது.

4. **சர்வாதிகார ஆட்சி முடிவு**

இத்தாலிலும், ஜெர்மனியிலும் சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வரப்பட்டது.

5. **ஜப்பானில் மாற்றம்**

அமெரிக்கா ஜப்பானை கைப்பற்றியது.

**6. பனிப்போர்**

அமெரிக்காவும் ரஷ்யாவும் வல்லரசுகளாக மாறி பனிப்போர் துவங்கியது.

**7. உலக அமைதிக்கு வித்து**

1945ம் ஆண்டு உலக அமைதிக்காக ஐ.நா.சபை தோற்றுவிக்கப்பட்டது.

**8. விடுதலை நாடுகள்**

1. இந்தியா, இலங்கை, பர்மா, எகிப்து, மலேசியா ஆகிய நாடுகள் பிரிட்டனிடமிருந்தும்
2. பிலிப்பைன்ஸ் அமெரிக்காவிடமிருந்தும்
3. இந்தோ-சீனா பிரான்சிடமிருந்தும்
4. இந்தோனேஷியா டச்சுக்காரர்களிடமிருந்தும் விடுதலை பெற்றன.

**9. கொள்கை கைவிடல்**

1. ஐரோப்பிய நாடுகள் குடியேற்றக் கொள்கை மற்றும்
2. ஏகாதிபத்தியத்தை கைவிட்டன.

48. இ. **பாரதியார் ஒரு சுதந்திர போராட்ட வீரர் - நிருபி. (ஏதேனும் 5 மட்டும்)**

**1. பத்திரிக்கை ஆசிரியர்**

1. பாரதியார் சுதேச மித்திரன் பத்திரிக்கையின் உதவி ஆசிரியராக பணியாற்றினார்.
2. தமிழ் வாரப் பத்திரிக்கையான இந்தியாவி பத்திரிக்கையின் ஆசிரியரானார்.
3. பால பாரதம் என்ற ஆங்கில பத்திரிக்கையை வெளியிட்டார்.

**2. காங்கிரஸ் மாநாட்டில்**

1. 1907 ஆம் ஆண்டு சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.
2. 1908 ஆம் ஆண்டு சென்னையில் மாபெரும் கூட்டத்தை நடத்தி சுயராஜ்ஜிய நாளை கொண்டாடினார்.

**3. தேச பக்தி பாடல்கள்**

அவரது பாடல்களான வந்தே மாதரம், அச்சமில்லை அச்சமில்லை, எந்தையும் தாயும், ஜெய பாரதம் போன்ற தேச பற்று மிக்க பாடல்கள் அச்சிடப்பட்டு தமிழ் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

4. **வ.உ.சி.யின் நண்பன்**
   1908 ஆம் ஆண்டு வ.உ.சி.க்கு எதிரான வழக்கில் வ.உ.சி.க்கு ஆதரவாக சாட்சி அளித்ததால் ஆங்கில அரசு இவரை கைது செய்தது.
5. **புதுவைக்கு தப்பல்**
   இதனால் புதுவைக்கு தப்பி ஓடிய பாரதி அங்கிருந்து தினசரி, வார இதழ் மற்றும் மாத இதழ்களில் தனது படைப்பினை தொடர்ந்து வெளியிட்டார்.

49. அ. **சார்க் அமைப்பு பற்றி சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் 5 மட்டும்)**

1. **தோற்றம்**
   சார்க் அமைப்பு 1985 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
2. **விரிவாக்கம்**
   இது தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு என்று அழைக்கப்படுகிறது.
3. **பொது செயலாளர்**
   இதன் முதல் பொதுச் செயலாளர் ஆஷான் ஆவார்.
4. **மாநாடுகள்**
   1. 1985 – வங்காளதேசத்தின் டாக்கா நகரில்
   2. 2007 - இந்தியாவின் டெல்லியில்
   3. 2010 – பூடானில் திம்புவில்
   4. 2014 – நேபாளத்தின் காட்மண்டுவில் என இதுவரை 18 மாநாடுகள் நடைபெற்றுள்ளது.
5. **உறுப்பு நாடுகள் (PAIN MBBS)**
   இதில் எட்டு உறுப்பு நாடுகள் உள்ளன.
   1. இந்தியா
   2. பாகிஸ்தான்
   3. நேபாளம்
   4. பூடான்
   5. பங்களாதேஷ்
   6. இலங்கை
   7. மாலத்தீவுகள் மற்றும்
   8. ஆப்கானிஸ்தான்.
6. **செயல்பாடுகள்**
   நாடுகள் தங்களுக்குள்
   1. போக்குவரத்து
   2. கடித சேவை
   3. சுற்றுலா
   4. வானியல்
   5. சுகாதாரம்
   6. வேளாண்மை
   7. கிராமபுனரமைப்பு மற்றும்
   8. தகவல் தொடர்பு போன்றவற்றில் உதவி செய்து கொள்ளுதல்.

**49. ஆ. தேசிய ஒருமைப்பாடு பற்றி எழுதுக (ஏதேனும் 5 மட்டும்)**

1. **புவியியல் அமைப்பு**
   மக்களின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், சமய நம்பிக்கைகள், மொழி, உணவு, உடைகள் போன்றவை புவியியல் அமைப்பு ஒட்டி வேறுபடுகின்றனா.
2. **பாரம்பரியம்**
   மனிதாபிமானம், சமய உணர்வு, சகோதரத்துவம், நட்பு, சகிப்புத் தன்மை போன்ற இந்திய பாரம்பரியம் இந்தியவர்களை ஒற்றுமையுடன் வாழ வழி செய்கிறது.

3. **தேசிய சின்னங்கள்**
   தேசிய சின்னங்கள், தேசியக் கொடி, தேசிய கீதம் போன்றவை தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன.
4. **இந்திய கலாச்சாரம்**
   ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதற்கேற்ப இந்திய ஒற்றுமை சிந்து சமவெளி காலத்திலிருந்து இந்திய கலாச்சாரத்தை நிலைநாட்ட உதவி வருகிறது.
5. **பாரத தாயின் பிள்ளைகள்**
   அனைவரும் பாரத தாயின் பிள்ளைகள் என்ற எண்ணம் மற்றும் உணர்வு, இந்தியவர்கள் அனைவரும் சகோதர, சகோதரிகள் என்ற எண்ணம் போன்றவை இந்திய ஒலுமைப்பாட்டை வளர்க்க பெரிதும் உதவுகின்றன.

**49. இ. நுகர்வோரை பாதுகாக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் (ஏதேனும் 5 மட்டும்)**

1. **நுகர்வோர் கழகங்கள்**
   கல்வி நிறுவனங்களில் நுகர்வோர் கழகங்கள் அமைத்தல்
2. **குடியிருப்போர் சங்கங்கள்**
   ஊராட்சி பிரதி நிதிகள் மூலம் கிராமங்களிலும், நகரங்களில் குடியிருப்போர் சங்கங்களை உருவாக்குதல்
3. **கருத்தரங்குகள்**
   மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் கருத்தரங்குகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
4. **மாத இதழ்**
   “தமிழ்நாடு நுகர்வோர் கவசம்” மாத இதழின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
5. **பிரச்சாரம்**
   வானிலை , தொலைக்காட்சி ம்ற்றும் குறும்படங்கள் மூலம் பொதுமக்களிடம் பிரச்சாரம் செய்தல்

**50. அ. காடுகளின் முக்கியத்துவம் (ஏதேனும் 8 மட்டும்)**

1. **மூலப்பொருள்**
   காடுகள் வீட்டு தேவைக்கும், வணிகத்திற்கும் விலையுயர்ந்த மரங்களையும், தொழிற்சாலைகளுக்கு மூலப்பொட்களையும் தருகிறது.
2. **நறுமணப் பொருட்கள்**
   காடுகள் அரக்கு, கோந்து, பிசின், மருந்துகள், தேன், நறுமண பொருட்கள் மற்றும் மூலிகைகளை அளிக்கிறது.
3. **அந்திய செலாவணி**
   வனப்பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால், அந்நிய செலாவணியை ஈட்டுகிறது.
4. **பால் உற்பத்தி**
   காடுகள் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்களாக உள்ளதால் பால் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.
5. **சுற்றுலா**
   பல காடுகள் சுற்றுலா மையங்களாக திகழ்கின்றன.
6. **சுற்று சூழல் பாதுகாப்பு**
   காடுகள் வளிமண்டலத்தில் உள்ள கார்பன்-டை-ஆக்ஸைடை உட்கொண்டு காற்று மாசுப்படுதலை கட்டுப்படுத்துகிறது.
7. **மண்ணரிப்பு**
   காடுகள் வெள்ளப் பெருக்கு மற்றும் மண்ணரிப்பினை கட்டுப்படுத்துகிறது.
8. **நிலத்தடி நீர்**
   காடுகள் மழைநீரை பூமியின் உள்ளே செலுத்தி அதனால் நிலத்தடி நீரின் அளவை அதிகரிக்கிறது.

9. **எரி சக்தி**
   நாட்டின் எரிசக்தி தேவையை காடுகள் பூர்த்தி செய்கிறது.
10. **வாழிடம்**
   மனிதர், பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு இயற்கையான வாழிடங்களை காடுகள் அளிக்கிறது.
11. **காலநிலை**
   காடுகள் காலநிலையை சீராக்கி மழைப்பொழிவை தருகிறது.

**50. ஆ. அமில மழையின் விளைவுகள் (ஏதேனும் 5 மட்டும்)**

1. **மீன் உணவு**
   அமில மழையால் கடலில் மீன் உணவான பிளாங்டன் உயிர் வாழ இயலாது
2. **கடல் வாழ் உயிரினம்**
   இதனால் கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.
3. **உணவு சங்கலி**
   இது உணவுச் சங்கிலியை பாதிக்கிறது.
4. **பவளப் பாறை**
   கடல் வெப்பம் அதிகரிப்பால் பவளப் பாறையின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது
5. **உயிரினப் பன்மை**
   உயிரினப் பன்மை இழப்பு இன மறைவுகள் ஏற்படுகின்றன.
6. **மண் சத்து**
   மண்ணில் சத்து அரிக்கப்பட்டு இயற்கைத் ாபவரங்களைப் பாதிக்கின்றது.
7. **காடுகள் பாதிப்பு**
   காடுகளும், பாலைவனங்களும் பாதிக்கப்படுகின்றன.

**50. இ. தொலை நுண்ணுணர்வு நுட்பம் (ஏதேனும் 10 குறிப்புகள் மட்டும்)**

1. **தொலை நுண்ணுணர்வு நுட்பத்தின் விளக்கம்**
   நிலத்தில் காலடி வைக்காமலேயே எந்தவொரு பகுதியின் வளத்தைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்க உதவும் மிகச் சிறந்த நுட்பம் தொலை நுண்ணுணர்வு நுட்பமாகும்.
2. **தொலை உணர்விகள்**
   1. புவியிலாளர்கள் தொலை உணர்விகள் என்ற கருவியை ஹெலிகாப்டர்கள், விமானங்கள் மற்றும் செயற்கைக்கோளில் பயன்படுத்தி புவியைப் பற்றிய விவரங்களை சேகரிக்கின்றனர்.
   2. இத்தகவல்கள் பொருட்களின் மீது பட்டு பிரதிபலிக்கின்றன.
   3. சூரிய ஒளியின் மின்காந்த அலைகளை பதிவு செய்தவன் மூலம் பெறப்படுகின்றன.
3. **தொலை நுண்ணுணர்வின் ஆரம்பம்**
   1. வான்வழிப் புகைப்படங்கள் தொலை நுண்ணுணர்வு நுட்பத்தின் ஆரம்பமாகும்.
   2. மேப்பியலாளர்கள் வான்வழிப் புகைப்படங்களைப் பயன்படுத்தி வரைபடம் வரைந்தனர்.
   3. 1858 ஆம் ஆண்டு பிரெஞ்சு மேப்பியலாளர்கள் பலூன்களையும் புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்ட விமானங்களையும் பயன்படுத்தி நிலத்தோற்றங்களை சாய்கோணத்தில் படம்பிடித்தனர்.
   4. வேறு வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப் படங்களை ஒப்பிட்டு பார்த்து குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட பரப்பினை சரியான விவரங்களைக் கொண்ட வரைபடங்களை உருவாக்கும் திறமை பெற்றிருந்தனர்.
4. **தொலை நுண்ணுணர்வு நுட்பத்தில் புரட்சி**
   1. 1960ல் தொலை நுண்ணுணர்வு நுட்பத் துறையில் செயற்கைக் கோளைப் பயன்படுத்திய பின் ஒரு புரட்சி ஏற்பட்டது.
   2. செயற்கைக் கோளின் உயரத்திலிருந்து புவியின் பெரும் பரப்பை

புகைப்படம் எடுக்க முடிகிறது.

3. அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசால் 'வானிலை செயற்கைக்கோள்' TIROS-1 மற்றும் புவி வள நுட்ப செயற்கை கோள் டுயுனேளுயுவு ஆகியவை விண்ணில் ஏவப்பட்டது.
4. 1986ல் பிரெஞ்சு நாடு 'ஸ்பாட்' (SPOT) என்ற செயற்கைக் கோளை அனுப்பியது.
5. ஐந்து பிரெஞ்சு செயற்கைக் கோள்கள் விண்ணியல் ஏவப்பட்டு 10 மில்லியனுக்கு மேல் பதிமங்களை எடுத்துள்ளன.

**51. அ. நாட்டு வருமானம் அறிவதன் அவசியம் (ஏதேனும் 5 மட்டும்)**

1. **பொருளாதார நிலையை கணக்கிட**
   ஒரு நாட்டின் பொருளாதார செயல்பாடுகளின் நிலையை கணக்கிட பயன்படுகிறது.
2. **பொருட்களின் மதிப்பை அறிய**
   ஒரு நாட்டின் உற்பத்தி பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பை அறியப் பயன்படுகிறது.
3. **வருமானத்தை ஒப்பிட்டு பார்க்க**
   ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் போக்கையும் வேகத்தையும் முந்தைய ஆண்டுகளின் வருமானத்தை ஒப்பிட்டு பார்க்க பயன்படுகிறது.
4. **பிற நாடுகளுடன் ஒப்பிட**
   பிற நாட்டு வருமானத்ததுடன் ஒப்பிட்டு பார்க்கவும் பயன்படுகிறது.
5. **துறைகளை அறிய**
   நாட்டு வருமானத்தில் முதன்மைத்துறை, இரண்டாம் துறை மற்றும் பணிகள் துறை பங்களிப்பின் அமைப்பை அறிய பயன்படுகிறது.
6. **திட்டங்கள் வகுக்க**
   பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க வேண்டி அரசு கொள்கைகளை வகுக்கவும் திட்டமிடவும் பயன்படுகிறது.

**51. ஆ. பசுமை புரட்சி (ஏதேனும் 5 மட்டும்)**

1. **அறிமுகம்**
   1967ல் பசுமைப்புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
2. **நோக்கம்**
   இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையச் செய்வது
3. **இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்**
   இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் பசுமைப் புரட்சி என்ற செயல்முறையை நிலச்சீர்த்திருத்தம் அதிக விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகள் பயன்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட பாசன வசதிகள் மூலமாக அறிமுகப்படுத்தியது.
4. **உற்பத்தி அதிகரிப்பு**
   பசுமைப் புரட்சி என்பதே கோதுமை மற்றும் அரிசி போன்ற உணவுப் பயிர் உற்பத்தி அதிகரித்தது. அதற்காக வீரியமுள்ள விதை, நீர்பாசன வசதிகள், இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்பட்டன.
5. **வேளாண் பல்கலைக்கழகங்கள்**
   அதிக விளைச்சல் தரும் விதைகளை பயன்படுத்துவதற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனமும், வேளாண் பல்கலைக்கழகங்களான லூதியானா, பந்த் நகர், கோயம்புத்தூர் முக்கிய காரணம் ஆகும்.
6. **உற்பத்தி தன்னிறைவு**
   பசுமை புரட்சியின் விளைவாக கோதுமை மற்றும் அரிசி உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடைந்தது.

**51. இ. பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தின நோக்கங்கள்**

1. வேளாண் ஆராய்ச்சியை ஊக்கப்படுத்துதல்
2. வேலை வாய்ப்புகளை விரிவாக்குதல்.
3. வறுமையை ஒழித்தல்
4. கிராமபுற கட்டமைப்பு வசதிகளை பெருக்குதல்.
5. மின்சாரம், உரங்களுக்காகன மானியத்தை குறைத்தல்.
6. தொடக்கக் கல்வியில் இடைநிற்றலை குறைத்தல்.
7. சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதிசெய்தல்.
8. நீர்பாசனம், கிராம மின்மயமாதல், கிராம சாலைகள் மேம்படுத்த அரசு முதலீட்டை அதிகரித்தல்

**52. காலக்கோடு 1910 முதல் 1930 வரை (ஏதேனும் 5 மட்டும்)**

**1911 – வங்க இணைவு**
**1914 – முதல் உலகப்போரின் துவக்கம்**
**1916 – லக்னோ மாநாடு**
**1918 – முதல் உலகப்போரின் முடிவு**
**1919 – ஜாலியன் வாலாபாக் படுகொலை, ரௌலட் சட்டம், மாண்டேகு-செம்ஸ்போர்டு சட்டம்**
**1920 – ஒத்துழையாமை இயக்கம், கிலாபத் இயக்கம்**
**1922 – சௌரி சௌரா இயக்கம்**
**1923 – சுயராஜ்ய கட்சி தோற்றம்**
**1925 – சுயராஜ்ய கட்சி மறைவு**
**1927 – சைமன் குழு அமைத்தல்**
**1928 – சைமன் குழு வருகை**
**1930 – தண்டி யாத்திரை, முதல் வட்டமேசை மாநாடு**

**53. அ. வரலாறு - ஐரோப்பா வரைபடம்**



53. ஆ. வரலாறு - இந்தியா – வரைபடம்



54. புவியியல் - இந்தியா வரைபடம்

